முருகப்பெருமான் துணை

**மகான் ஜனந்தனர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.02.2024,** திங்கட்கிழமை

1. உலகமாற்றம் நிகழ்த்த வேண்டி
உயர்வான அவதாரம் தன்னை
வேலவன் சக்தியாக எடுத்துமே
வழிகாட்டும் ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சால்திங்கள்
வரங்களென சப்தம திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 07 ம் நாள், 19.02.2024, திங்கட்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசி
3. ஆசிதனை ஜனந்தனர் யானும்
அகிலம் உயர்வு பெற உரைப்பேன்
ஆசிதந்து அரங்கமகான் வழி
அனைத்து ஞானிகளும் ஒன்றிணைந்து
4. ஒன்றிணைந்து பிரணவக்குடிலில்
ஓங்கார நாதமாக ஆற்றலை
நன்றுபெற வேதமாக ஆசியாக
ஞானமாக அரங்கன் வழி உபதேசம்
5. உபதேசம் தந்து வருக
உலகோர் ஒன்று சேர்ந்துமே
அபயமென பிரணவக் குடிலில்
அணிவகுத்து அரங்கன் சீடர்களாக
6. ஆகவே தீட்சை உபதேசமும்
அடைந்து சேவை கலந்து
வகைபட தருமத்தில் உதவி
வள்ளல் தன்மை அடையும்படி
7. அடையும்படி தொண்டாற்றி
அகிலமெங்கும் அரங்கன் புகழை
தடையற கொண்டுச் செல்ல
தவராஜன் அவதாரம் உலகே அறிந்து

8. அறிந்து அரங்கன் தவசக்தி
ஆற்றலாகப் பரவி கலந்து
அறிந்தவர் அறியாதவரென
அனைவருக்கும் அரங்கன் ஞானம்

9. ஞானம் சித்தியாக மாறி
ஞான பண்டிதனை வழிபடவும்
தான தரும வழிகளை ஏற்று
தயவு நெறியை பற்றவும் வகை செய்யும்

10. செய்யவே ஞான பலமுள்ள
செப்பிடுவேன் தருமவான்கள் படை
அய்யன் முருகன் ஆசிதர
அகிலமெங்கிலும் நிரம்பியே

11. நிரம்பியே உலகமாற்றமதும்
நீதிமான்கள் தருமவான்கள் ஆள
அருந்தவசி அரங்கன் அவதாரமும்
ஆற்றல்பட வெற்றி காணும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–